ISSN : 2456-821X அவையம் 2(2) 2018 P.NO. : 77-88




# முதல் மரியாதை திரைப்படத்தில் பழமொழிகள்

**முனைவர் ஆ.முத்தையன்**

*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 30.10.2018** **ஏற்கப்பட்டது : 10.11.2018**

*சிறந்த வட்டார திரைப்படமாக 1985-ல் பாரதிராஜா இயகத்தில் முதல் மரியாதை திரைப்படம் வெளிவந்தது. இன்றளவும் கிராமத்து படம் (கலைப்படம்) என்கிற அளவில் பேசப்பட்டுவருகிறது. இளையராஜா இசையமைத்து வைரமுத்து வரிகளால் உருவான பாடல்கள் தமிழக மக்களிடத்தில் இன்றளவும் பெரிய உணர்வலைகளை உருவாக்கி வைத்திருக்கிறது. சிவாஜிகணேசன், ராதா, வடிவுக்கரசி, ரஞ்சனி, தீபன், சத்யராஜ், ஜனகராஜ் என்று பலரும் நடித்துள்ள இத்திரைப்படம் எத்தனைமுறை பார்த்தாலும் மண்வாசனையைக் கொண்டு வரக்கூடிய திரைப்படம். நாட்டுப்புற ஆய்வாளன் என்கிற முறையில் படத்தைப் பார்க்கும் தருவாயில் தோன்றிய சிந்தனையின் வெளிப்பாடு படத்தில் இடம்பெற்றுள்ள பழமொழிகளைச் சூழல் அடிப்படையில் தொகுக்கும் பணியில் ஈடுபட வைத்தது.*

## சூழல் அடிப்படையில் பழமொழிகள்

- *பொன்னாத்தாள் (வடிவுக்கரசி) கணவன் இன்னொரு பொண்ணோடு வைத்திருந்த காதலால் அவள் தங்கிய ஆத்தங்கரையோர வீட்டில் உடல்நிலை மோசமான நிலையில்*

*படுத்திருக்கிறார். அங்கு கூடிய கூட்டத்தார் சுமார் 20 பேர் தங்களுக்காகப் பேசிக் கொண்டிருக்கும்போது, கூட்டத்தில் ஒருவா;*

**“ஆட்டுமந்தைய திருப்பிவிட்ட மாதிரி”** *(சலசலப்புக்குக் கூறுவது - இதைக்கேட்ட அனைவரும் அமைதியாயினர்) நாம்ளே பேசிட்டிருந்தா என்னயா பிரயோசனம்இ அட அந்த பொன்னாத்தாளுக்குத் தெரியலயே…*

*பதில் : பொட்டச்சு என்னதான் உச்சத்துல இருந்தாலும் எறங்கி வரவதான்… நீங்க பெரியவங்க நாலு பேரு கூப்டா வரமாட்டேன்னா சொல்லுவா(ள்). (அதற்கு அனைவரும்)*

- *ஊடல்நிலை சரியில்லாத கணவனைப் பார்க்க வந்த பொன்னாத்தாளை அழைத்த கூட்டத்தில் இருந்த ஒருவர், மலைச்சாமி (சிவாஜி) யிடம் ‘‘கண்ணத்தெறந்து பாருங்க.. பொன்னாத்தா.. வா தாயி’’ என்று கூற,*

*பொன்னாத்தாள் :* **“ஆனைய பாக்குறதுக்கு வெள்ளெருக்குக் கண்ணாடி எதுக்குயா”**

**“ஆச அவமேல ஆதரவு பாய்மேலங்ககறாப்ள மாதிரியில்ல படுத்துருக்காங்க…”** *முப்பது வருசமா வாக்கப்பட்டு மூக்க பாக்றதும் மூக்க சிந்தி போடுறதுமாவே காலத்த கழிச்சிப்புட்டேன்… இந்தப் புருசனக்கட்டிக்கிட்டு என்ன பெரிசா அள்ளிக் கொட்டிக்கிட்டேன்.. என் ராசிக்கு…*

**“ஆயிரங்களில் மண்டபம் கட்டி ஆண்டுகடின்னாகூட வெயிலுதான் அடிக்கும்”** *இல்லனா துருபுடிச்ச கொரட்டுக்கும் பத்து வெல்லாட்டுக்கும் வச்சிருவா;க.. இவருக்கு வாக்கப்பட்டிருப்பனா…என்று பேசினாள். (அங்கிருந்தவர்கள் இவளுடைய பேச்சைக் கேட்டு அமைதியாய் இருந்தனர்.)*

- *மாடுகளையும் ஆடுகளையும் மேய்க்கப்போகும் மருமகனிடம் பொன்னாத்தாள்,அடேய் மருமகனே…*

**‘‘அங்கியும் இருப்பான் இங்கியும் இருப்பான் திங்கிற சோத்துல பங்கும் கேப்பானு சொல்லுவாக…”**

*உன் மாமனுக்காவுது வௌ;ளாடும் தொரடிட்டும் சொந்தமா இருக்குது… உனக்கு கோவணத்துணி கூட சொந்தமில்லியே… அதென்ன அடுப்பு+தற குச்சியில அப்புடி ஒரு பாட்டு…ம்ம்… இந்த மத்தியானத்துக்கு வாக்கட்ட போட்டு மாட்டுகளா பாரு… (அதற்கு சரி என்ற படி தலையாட்டிச் சென்றான்)*

- *பிடிக்காத கணவனனோடு வாழ்ந்து கொண்டிருக்கும் பொன்னாத்தாளும் கடமை என்று கட்டிக்கொண்ட மலைச்சாமியும் எப்பொழுதும் நேராக நின்று பேசிக்கௌ;வதில்லை. ஆவ்வாறிருக்க பொன்னாத்தாள் சுத்தமில்லாத கைக்களால் திமிருதனத்தோடு இடும் சோற்றினைத் தின்னாமல் வீட்டினுள்ளே சென்றுதுணி மாற்றிக்கொண்டு வெளியே*

உள்ள அறுவாளை எடுத்துக்கொண்டு வெளியே செல்லும்போது பொன்னாத்தாள் சிவாஜி வருவதைப் பார்க்காமல் அவர் மீது தண்ணீரை ஊற்றுகிறாள். அப்போது,

**நாயி வால என்னக்கி நிமித்;த முடியும்?** (பொன்னாத்தாள் முறைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்) என்று சொல்லிவிட்டு வெளியே சென்றான்.

- வயக்காட்டிலிருந்து வேலை முடித்து செல்லும் மலைச்சாமி, காட்டு வழியாக நடந்து வரும் மூவரைப்பார்த்து "ஏலேஇ காட்டுப்பயலுகளா...என்ன மெதுச்சுட்டு போற சடங்கா... ந்தா... ஏறிமுதுச்சிகிட்டு வர்ரவன்.. சொல்ற கேட்கறானா பாரு.. யார்ரா சட்டிமுட்டியோட வர்ரவன்...",

"சாமி வையாதீங்க சாமி.. வையாதீங்க... பாரபட்டிக்கு வழிதரியலங்க... அரப்புடிச்சாம்பட்டிலிருந்து பஞ்சபொழைக்க வந்தவங்க..."

"பஞ்சம் பொழக்க வந்தியா.. இங்கியே,

**பஞ்சு அவுத்துபோட்டுகிட்டு அம்மணத்தோடு ஆடுது...** நீ அரம்புடிச்சாம்பட்டிலிருந்து வந்துட்ட பாரு...(பேருதாங்க அரப்புடிச்சாம்பட்டி... ஆனா அங்க சோத்துக்கு வழியில்ல...ஏதோ வம்சநதி பாயுற பூமி... வளமா இருக்கும்னு நெனச்சு வந்தபுட்டம்ங்க... என்றார். இது யாரு உம்ட உழக்கு? என்று பேசிக்கொண்டே நகர்ந்தனர்.

- மலைச்சாமி வயக்காட்டிற்குச் செல்லும்போது "ஏ... புள்ளகல என்னா..எல்லா ஊமாகோட்ட மாதிரி உம்னு வேல செய்யுறீங்களா... ஏ... மரிக்கொழுந்து வீட்டுல இருந்து வரும்போது வாயில எதாவது அடக்கிட்டியா... அட செரம தெரியாம ஏதாவது பாடிக்கிட்டே வேல செய்ய வேண்டிதான?"

மரிக்கொழுந்து : "உச்சி வெயிலு மண்டய பொழக்குது... ஊருவம்பா பேச முடியும்?

**"பொழுது எப்ப சாயும் கூலி எப்ப வாங்கலாம்னு"** நாங்காள கெடக்கோம் என்று கூற,டேங்கப்பா... என்னடா இழுவ சாஸ்தியாடாருக்கு... டே... என்றார்.

- குருவி பார்த்து மகிழ்ச்சியாகப் (மருமகன் புல்லாங்குழல் இசையோடு) பாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த பொன்னாத்தாள்.. (மருமகனைத் தலையில் அடித்துக்கொண்டே சொல்லியது) ம்ம்...

**"அப்பச்சி போனத காக்கா தூக்கிட்டு போயிச்சாம் ஆடிகாத்துல ஆட்டம்போச்சாம் நாரகுஞ்சு"** **"மவராசன் கச்சேரியில வைகுண்டம் தெரியுதுன்னு பாட்டு பாடினானாம்மா..."** எல ஈர வெங்காயத்துல பொறந்தவனே... எங்கடா போன என்று கேட்டுக்கொண்டிருக்க,மனைவியைப் பார்த்து திரும்பி உட்கார்ந்த மலைச்சாமி... மருமகனைத் துரத்திக்கொண்டு மனைவி சென்றவுடன் பொண்டாட்டி கூத்து ஆரம்பமாச்சு

(என்று சிரித்துக்கொண்டு கால்களைக் கழுவிக் கொண்டிருந்தார்... அப்பொழுது துரத்திக் கொண்டு போன பொன்னாத்தாள் தன்னுடைய வீட்டுச் சந்தினுள் மருமகனைப் பிடிக்க அங்கு ஜன்னல் வழியாக வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருந்த நாயகி குயிலுவைப் (ராதாவை) பார்த்து.. ''யாருடி இந்த சிறுக்கி... அங்க என்னடி பண்ற'' என்று கேட்டவுடன்... அவர் பயந்து கொண்டு ஓட.... அந்த ஜன்னல் வழியாக நாயகன் வாயிலிருந்து நீரை வெளியில் துப்பினார்... அப்பொழுது மருமகனிடம் யார் என்று பார்க்கச் சொன்ன பொன்னாத்தாளிடம்... ''அத்த இந்த அசிங்கத்த.. இத நான் சொல்ல மாட்டேன்.. நீயே வந்து பாரு என்று கூற.... ம்ம்.... அப்புடி என்னடா பண்ணிட்டு போயிட்டா?'' என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்த (ஈரம்படிந்திருந்த சுவரைப் பார்த்துவிட்டு...)

''ம்ம்... யாருடி அந்த சிறுக்கி... என் வீட்டு சொவத்துல..

**“மழ பேஞ்சமாதிரி”** இந்த நீட்டத்துக்கு பேஞ்சுட்டு போனவ...'' என்றுசொல்ல எதிரே சென்று கொண்டிருந்த இருவா;,''பொன்னாத்தா சங்கூத ஆரம்பிச்சுட்டா... நீ வா'' என்று கூறிக்கொண்டே சென்றனா;.பொன்னாத்தா திட்டிய பேச்சைத் தொடா;ந்தார்... அங்கு கூட்டம் கூடியது.

- மனைவி தப்பானவள் என்று பஞ்சாயத்து கூட்டிய ஒருவா; ''நானும் கருப்பு பொண்டாட்டியும் கருப்பு.. கொழந்த மட்டும் எப்படி செவப்பா பொறந்துச்சுனு கேட்க... கொழந்த தெய்வமா பாத்து குடுக்கிறது. தப்பா பேசாதாபா'' என்று பொியவா; கூற, தன்னுடைய மனைவி பெண்களிடம் பேசுவதே இல்லஇ ஆண்கள்ட்ட மட்டும்தான் எல்லாம் செய்யுறா... மாமியாரு வந்தா அனுப்பிவிட்டராபாருங்க.. அந்த சின்னப் பையனுக்குத் தண்ணி குடுக்கிறாள் என்றுகூற... ஆம்பளன்னு எவன் வந்தாளும் நெறைய குடுக்கிறாங்க... என்று கூறஇ பஞ்சாயத்தாரில் ஒருவர்...

**“ஏ... இருட்டுல கவுத்த பாத்துட்டு பாம்புனு கத்துன மாதிரி”** நல்ல கற்பன பன்றப்பா...

**“பொம்பள சிரிச்சா பேச்சு பொகையில விரிச்சா போச்சுங்கற மாதிரி...**'' இதெல்லாம் குடும்ப வெவகாரம்... இதமூடி மறைக்கணும்... என்று கூறினார். (மலைச்சாமி: பஞ்சாரம் கூடினது நல்லதாதான் போச்சு.. என்று கூறினார்.)

- பாட்டுப்பாடிக் கொண்டிருந்த மலைச்சாமி மனைவி வருவதைக் கண்டு விலகிட, பயமில்லாமல் போச்சு என்று கத்திக்கொண்டு வயக்காட்டில் நெல் விளைச்சலைப் பகிர்ந்து கொண்டிருந்த வேலையாட்களிடம் ஒரு மூட்டை நெல்லை பரிசாகப் கொடுத்துக் கொண்டிருந்தார். பொன்னாத்தாள் நிறுத்த சொல்லி சொல்ல...

''அவரு கொண்டு வந்தது 10 வெள்ளாடும் துரப்புடிச்ச தொரட்டியும் தவிர வேற எதுவும் இல்ல.. அதான் அந்தாளு பரம்பர சொத்து அத தவிர வேறு எதுவும் இல்ல... எல்லாம் எங்க அப்பன்

கொடுத்தது.. ஒரு மூட்ட நெல்லு வெல என்னன்னு தெரியுமா அவருக்கு.. டவுன்ல போயி விசாரிக்கசொல்லு உங்க அய்யாவ.. அப்பவாவது அறிவு வருதா பாப்போம்.. அந்த மனுசனுக்கு.. அந்தாளு வெளுக்க வேட்டி கட்டுனதே எங்கப்பன் காசுலதான்... அதனாலதான்

**''ஊராமுட்டு நெய்யே என் பொண்டாட்டி கையேன்னு''** பெருசா சொல்லிபுட்டாரு...

(அடிக்க செல்ல இதை கேட்டு கொண்டிருந்த மலைச்சாமி நடந்ததை நினைத்து அழ...(மாமனார் மண்டியிட்டு கேட்டுகொண்டதை நினைத்து கண்ணீர் விட்டு அழுது கொண்டே அங்கிருந்து செல்ல..)''அறிவு கெட்டுபோயி அந்த மனுசன்தான் அப்புடி சொன்னாருன்னா...

**''ஏதோ அந்த ஆளுக்கு முந்தி விரிச்சி மாதிரில்ல..''** முந்தி விரிச்சுட்டு வந்துட்டாளுக... என்ற பொன்னாத்தாள். (இதைக் கேட்ட வேலையாள் அனைவரும் தம் கூடையில் இருந்த நெல்லை கொட்டினர்) வேலையாட்களைப் பார்த்து,

**''கல்லுல கத்திரிக்கா காச்சதுன்னா... கொத்தாயிரம் கொல ஆயிரம்னு சொல்ற கூட்டம்தானே...''** என்று சொல்ல.. ''வச்சுக்க ஆத்தா.. நீ எல்லாம் வச்சுக்க... எல்லாம் புழுபுழுத்து போயிரும்'' என்று சொல்லிக் கொண்டே சென்றனர். (மிரட்டுவது போன்ற தொணியில் பொன்னாத்தாள் இருந்தாள்.)

அதனை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த குயிலு (நாயகி) பாடுவதாக வரும் பாடலில், **''சூரியன் கருக்குமா...''** என்று வேதனையுடன் நாயகனைப் பார்த்துப் பாடுகிறாள்.

- கவலையில் பாடிக்கொண்டிருந்த மலைச்சாமியைப் பார்த்து மனசுல அம்புட்டு என்ன கவல...அப்புடி பாடுறீங்க.. என்று கேட்ட குயிலுவிடம், பாடுனா பாரம் கொரையும்னு சொல்வாங்க... அதனால பாடுனேன்...

**''பொந்தியில கவல இருந்தா மந்தயிலயா பாடுவாங்க...''** கவலையெல்லாம்,

**''காத்தாடி மாதிரி''** பறக்கவிட்டிருணும்... அடே பெரிய அஞ்ஞானமெல்லாம் பேசுறீக... இப்பதான் புருசுங்கிட்டீங்களா... நான் குயிலுன்னு... என்று நீண்ட வசனங்களைக் கூறினாள். (மலைச்சாமி ஆனந்த சிரிப்பு சிரித்தார்..)பிறகு வாய் பேச்சின்போது ஒன்பது இளவட்டம் இந்த கையில தூக்கி சுத்துவேன் என்று கூற,

**''இளவட்டம் அல்லைல குத்தும் நீங்க வார்த்தையில குத்துறீங்க''** என்று கூறி நாயகி சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த நாயகன் அவளை கூப்பிட்டு, ''ஏ... வா... வா இங்க.... ஏன் இப்படி சிரிக்கிறவ'' நாயகி சிரித்துக்கொண்டே....

**''ஆசயுள்ள கெழவனுக்கு அத்துவானம் கயிலன்னு''** எங்க கெழவி சொல்லும்... அது நெனபுக்கு வந்தச்சு சிரிச்சேன் என்று கூறினாள். ''யார கெழவங்கற... குடிசை கிடிசைலாம் காலி பண்ணிப்புடுவேன் சாக்குறத'' என்று கூற மிரண்டாள். ''சரிய்யா... நீ கொமரன்தான்

*ஒத்துகிறேன்... என்ன இம்புண்டு மெரட்டி மெரட்டி கத்தி பேசனல்ல... நீ சரியாட்ட ஆம்பளயா இந்த கல்ல தூக்குயா... பாப்போம்... தூங்கிபுட்டா... நீ கொமரன்னு ஒத்துகிறேன்...'', ''நீ கொமரன்னு ஒத்துகிட்டா போதுமா... பின்னே... என்னகட்டிகிறேன்னு சொல்லு'' என்று கூற, சரிய்யா நான் கட்டிக்கிறேன்... நீ இந்த கல்ல தூக்கு... என்றாள்.*

*''ம்ம்.... போனா போகுது நீ போ... பொழச்சுபோ..ஒன்னும் வேண்டாம்'' என்றுமலைச்சாமி கூறி மலுப்ப.. ''ம்ம்ம்.... அஸ்குபுஸ்கு...''*

***"அவுக தனத்துக்கு ஆயிரம் பேச்சுவேற..."** என்று ஓடினாள். (மலைச்சாமி கல்லைத் தூக்க முயற்சி செய்தான்.)*

- *சந்தையில் ஆடுவிப்பதற்காக அமர்ந்திருந்த குயிலுவைப் பார்த்த நாயகன்... ஏய்... என்ன.. ஆட்டப்புடிச்சிகிட்டு இங்க உக்காந்திருக்கவ...*

***"ஆடு அம்மணமா இருக்கேனு வேட்டிவாங்க வந்தியா"** என்று கூற, சிறு நகைப்புடன்... ம்ம்... பேச்சுகொன்னு கொரச்சலில்ல... பேச்சபாரு...*

***"பாலுருண்ட மாதிரி வளவளன்னு..."** நானே ஆடுவிக்கலன்னு வெந்துபோயி நிக்குறேன்... நீ வேற... என்று கூறினாள். (அவர் அமைதியானார்.)*

· *சந்தையில் கக்கத்தில் குடையினை வைத்துக்கொண்டு போன மலைச்சாமியைப் நாயகனைப் பார்த்த ஒருவர் (பஞ்சாயத்து) ''வணக்கம்.. பொறய நாட்டாம, என்ன விரிக்காம கக்கத்துல வெச்சுட்டு போறீங்க கொடய...'',''இதென்ன பவுனா பு+ட்டி பத்திரப்படுத்த போறீங்க'' என்று அவன் மனைவி கூற...*

***"நீதான் எடமறிஞ்சு கொட பிடிக்கணும்"** (என்ற சொன்னவுடன் அவனுடைய மனைவி வெட்கப்பட்டார்) ஏண்டா ஒரு கொடய வாங்கி குடுத்திருந்தீன்னா. குட்டி இப்புடி கருத்து போயிக்கமாட்;டள்ள... (சிரித்தாள், கணவன் தலை அடித்து என்னடி சிரிப்பு என்று கேட்க... அவள் சிரித்துக் கொண்டே சென்றாள்.)*

- *ஆற்றில் மீன்புடிக்க முயற்சி செய்து கொண்டிருந்த குயிலுவைப் பார்த்த நாயகன், ''ஏய்... அரப்புடி காப்புடி கெண்ட... பரிசல மல்லாக்க போட்டு அங்கென்ன பண்றவ... கொப்பன் இல்லியா...'' என்று நாயகன் கேட்க, ''அப்பன் ஏழுமலைக்குப் போயிருக்கு...'' அதனாலதான்,*

***"அவுத்துட்ட கன்னுகுட்டி மாதிரி துள்ளிகிட்டு திரிற..."** என்பதைக் கேட்டு நின்று கொண்டிருந்த நாயகியைப் பார்த்து...''ஆமாம்... கொப்பன் உன்ன தனியாவுட்டுட்டு போயிருக்கானே உனக்கு பயமே இல்லியா...'' என்று கேட்டார். அதற்கு,*

***"கள்ளிச் செடிக்கு காவலெதுக்கு... என்ன என்ன ஆடுமாடா திங்கபோது..."** என்று கூறிக்கொண்டே மீன் புடிக்க... அதனைக் கண்ட மலைச்சாமி...''நாங்கல்லாம் புடிக்க*

ஆரம்பிச்சா கெண்ட கிண்ட எல்லாம் அம்புட்டுதான் மாட்டிக்கும்'' என்று கூற,''எங்க உங்க கைசாமர்யத்தத்த காட்டுப் பாக்கலாம்'' என்று அழைக்கிறாள். அதற்கு,''ஆத்து மீனு குத்தகைக்கு விட்டுருக்குபுள்ள.. குத்தகைக்காரன் பாத்தான் உன்ன பஞ்சாயத்துக்குத் தள்ளிட்டு போயிருவான்...அப்புறம் நான்தான் உனக்காக வரணும்..''

**"அவுக தனத்துக்கு ஆயிரம் பேச்சுவேற**.. மீனு புடிக்கிறதுக்கு கைராசி இல்லன்னு சொல்லு...'', ''எனக்குக் கைராசி இல்லன்னா உன் கண்ண தோண்டிபுடுவேன் ஜாக்கிறத...'' என்று கூறிக்கொண்டு அருகில் சென்றான்..

- பொன்னாத்தாளின் மருமகன் திடீரென்று பேண்ட் சர்ட் அணிந்துவர ''யாருடா வாங்கி தந்தா... என்று திட்டியவர்... நேத்து சந்தை உன் மாமன் வாங்கி தந்தானா? நீ சேத்துவச்ச காசுல எடுத்தியா? இல்ல உங்க அப்பன் ஆத்தா சேத்துவச்ச சொத்துல எடுத்தியா? சொல்லுடா.. என் சொரண கெட்டவனே'' என்று கையில் வைத்திருந்த நீரினை மேலே ஊற்றிவிட்டு... ''நேத்து அரசரபொட்டியில வெச்சிருந்த 22 வோவய காணும்னு... லோ... லோன்னு கத்திட்டு இருந்தேனே... இந்த சிறுக்கி புத்தியில.. இது எடுபடல பாரு''

**"சனியன தூக்கி இடுப்புல சொருகி வெச்சுருக்கிறோம்"** என்று சொல்லி திட்டினாள். (அந்த காசெல்லாம் நான் ஒன்னும் எடுக்கலஎன்று கூறினான்.) எடுபட்டபயபுல்ல..

**"தொரட்டு குச்சியும் கோவனத்தோடயும் சுத்தரயலுக்குச்சூட்டுகோட்டு கேக்குதா?** எப்படா எடுத்த? என்னடா பண்ண? சொல்லுடா..என்று அடிக்க ஆரம்பித்தார். அடி வாங்கிக்கொண்டு வெளியில் சென்றுவிட்டான் (மருமகன் - செல்லக்கண்ணு).

- மலைச்சாமியின் மருமகனும் செவிலியும் படகினை எடுத்துக்கொண்டு சோளக்கருதைச் சுட்டு தின்னுவதற்காகச் சென்றனர். அப்பொழுது, ''சுடு புள்ள... ரெண்டு சோளக்கருத சுடறதுக்கு இவ்வளவு நேரமா?'', ''என்னமோ சோளத்தியே பாக்காத மாதிரில அலையுறியே... பக்குவமா சுட்டாதானா ருசியா இருக்கும்... இல்லாட்டி வாய்கெட்டுபோகாது... ஆமாம் என்ன என்ன உன் பொண்டாட்டின்னு நெனச்சிட்டிருக்கியா... ரொம்பதான் அதிகாரம் பண்ற...''

''இதையே அதிகாரம்ன்றியே... எங்க வீட்டுக்கு நீ வாக்கப்பட்டு வந்தா... எங்க அத்த உன்ன மாதிரி, **சில்லுப்பட்ட கழுதையெல்லாம் கேப்ப அரைக்குற மாதிரி அரச்சி மாவு மாவா பொடச்சி வச்சுட்ருவா..."** என்று கூற, பதிலுக்கு, ''நாமட்டும் என்ன லேசுபட்டவளா... கொட்டாக்குச்சில சோறாக்கி குடும்பம்புல்லா போட்ருவேன்... சொல்லு உங்க அத்தகிட்ட... (அவர்கள் பேசுவதை படகுக்குப் பின்னால் நின்று கேட்டுக்கொண்டிருந்த குயிலு,

**மம்... தங்கமணி அரிசியோட அரும தெரியாம பொரி பொரியா சோறாக்குறா** என்றாள். அதற்குசெவிலி, பொட்டச்சு பேச்சென்ன கெடக்கு பேச்சு... ரொம்பதான் பேசுறாளே உங்க

*அத்த... புள்ளதாச்சினுகூட பாக்கமா... கலியாணமாயி எட்டுமாசமாச்சி... இனிமே அங்கிட்டு இங்கிட்டும் நடக்க மாட்டேன்... மொதபுள்ள பொறக்குவரைக்கும்... இனிமே உங்ககூடதான் இருப்பேன்.*

*குயிலு : இருப்பபடி என் இலுப்ப பூவே...* **இழுத்தணைக்க முடியாதவ எகிற எகிறி பேசுறியே...**

*செவிலி :* **ஆத்துக்கு ரெண்டு பக்கம் கரையிருக்குறமாதிரி...** *ஒரு புருசனுக்குப் பொஞ்சாதியும் அத்தகாரியும் இருக்கனும்.. சமமா...*

*குயிலு : அதெப்டிடி முடியும்... வந்தவ ஓடுகாலியா இல்ல வந்திருக்குற...*

**"ஈச்சம் பழத்துக்கு இளயான்குடி போனவ நாவ பழத்துக்கு நாகனேரி போமாட்டியா என்ன?** *என்று சொல்ல... (பின்னால் இருந்து பேசுவதை அறிந்த அவர்கள் அமைதியாய் இருக்க)*

*குயிலு :என்ன... சத்தத்தியே காணாம்...*

**"வெந்நில விளுந்த கோழி மாதிரி..."** *அப்படியே அடங்கிடுச்சிடுங்க... என்று கூறி எட்டி பார்க்க... அவர்கள் இருவரும் ஓடினர்... அதைப் பார்த்து சிரித்தாள் குயிலு.*

- *தன்னுடைய மருமகனு (செல்லக்கண்ணு)க்கும் செவிலிக்கும் திருமணம் நடத்தி வைத்த மலைச்சாமியின் செயல் பிடிக்காத பொன்னாத்தாள், வெறுப்படைந்து...*

**"ஆலமரம் பட்டுபோயி அரசமரம் பூ பூத்த கதையா..."** *சாதிவுட்டு சாதி சம்பந்தம் பண்ணியிருகாகளே... இந்த பாவி மனுசன்...*

**"ஆட்டு வண்டியில கடந்த மாரி குறும்பாட்டையும் வெள்ளாட்டையும் சேத்து வெச்சிருக்காகளே..** *இது நம்ம வம்சத்துக்கே அடுக்குமா... என்று கூற (மலைச்சாமி காதை அடைத்துக் கொள்கிறார்...)*

- *மகளைப் பிறந்த வீட்டில் விட்டு சென்ற மருமகன் திரும்ப வந்து கூப்பிடும்போது மகளும் அதற்கு சம்மதிக்கிறாள். அப்பாவிடம் கேட்கும்போது, முன்னாள் நீதானே சொன்ன நான் செத்தாளும் போகமாட்டேனு... இப்போ யாரக்கேட்டு முடிவு பண்ணின? திரும்ப அடிச்சு வெரட்டி அனுப்பிவிட மாட்டானு என்ன நிச்சயம்? என்று கேட்டுக் கொண்டிருக்க...*

*பொன்னாத்தா :* **"அரிசின்னு அள்ளவிட மாட்டங்குற உமின்னு ஊதவிட மாட்டங்குற..."** *பெத்தவ நான் சொல்றேன்... போடி உள்ள...*

**"ஆயிரம் கை ஒலகத்துல இருந்தாலும் புள்ள வரம் குடுக்குறது புருசன் தாங்குற மறந்திராத..."** *என்றாள். இதனைக் கேட்ட மலைச்சாமி திக்குமுக்காட... அங்கிருந்து செல்கிறான்...*

- *செவிலியைக் கொன்றது தன்னுடைய மகளின் கணவன் என்பதை அறிந்து அவனைப் போலிசாரிடம் ஒப்படைத்தான் மலைச்சாமி. அதனால் சோகமுற்ற கன்னாத்தாள் ஒப்பாரி வைக்க... அடியே பாதகத்தி மக்கா... நான் யாருகிட்ட போயி சொல்வேன்... என்னான்னு சொல்வேன்...*

**"எல்லாருக்கும் எட்டெழுத்து என் தலைல பத்தெழுத்துன்னு எழுதிபுட்டானே"** *என்று ஒப்பாரி வைத்து அழுகின்றாள்... (அதைக் கேட்ட மலைச்சாமி சோகத்தில் இருந்தார்) அதற்கு அவளுடைய மகள்..*

**"கெழட்டு தட்டிபோச்சுன்னா கிருக்கா புடுச்சிரும்...** *ஒரு மனுசனுக்கு...*

**நாட்டாம சாதிக்கு செய்றதெல்லாம் நாயம்தான்..."** *என்று கூறி அழ... (அதனைப் பொருட்படுத்தாது அவளுடைய குழந்தையைத் துக்கினார்.. அதற்குப் பதிலுரைக்கிறார்... தான் செய்ததற்கான விளக்கத்தை எடுத்துரைத்தார்.)*

- *பொன்னாத்தா : "எலே... தண்ணிகட்ற பயலே... தண்ணிய பாத்துகட்ரா... அங்க என்ன வேடிக்கை..." என்று கூற, அங்கு வந்த ஒருவன் (ஜனகராஜ்), "ஆத்தா வெத்தலைக்கு கொஞ்சம் சுண்ணாம்பு குடேன்... ம்ம்...சுண்ணாம்புக்கு கொஞ்சம் வெத்தல குடேன்..." என்று கூற "அப்புற வெத்தலையும் கேப்ப போல" என்று கூற "புரிஞ்சிகிட்டா சாரதான்"என்றவர்... "மூணும் ஒன்னா போட்டாதான் சிவக்கும்" என்றவர்... "எத எங்க போடணுமோ அங்க போடணும் இல்லையா..." என்றதற்கு, "நீ கையிறுதிரிக்கின்ற பையலாச்சே... (இரட்டை அர்த்தம்) உனக்கு சொல்லியா கொடுக்கணும்..." (அவர் அமைதியாக இருந்தார்...) "பிறகு ஒன்னே ஒன்னு கையிருதிரிச்சிகிறேன்" என்றவர்... நம்ம வீட்டு பெரியமாப்பிள்ளைக்கும்... பரிசல் ஓட்டுற குயிலுக்கும்... சிநேகிதம்னு ஊர்பூரா பேச்சு என்றார். அதற்கு கோவப்பட்டு பதிலுரைத்த பொன்னாத்தாள், "என் புருசன்* **மலப்பாம்புயா... எந்த மகுடிக்கும் மயக்கமாட்டாரு...** *20 வருசமா குடும்பம் நடத்துறனே எனக்குத் தெரியாது" என்று கூறினார்... பிறகு புகைப்பட ஆதாரத்தை காட்ட, அங்கிருந்து புறப்பட்ட பொன்னாத்தாள்... மீன்விற்று கொண்டு வந்த குயிலுவைப் அடிப்பதற்காகச் சீமாத்துகட்டையைத் தூக்கிக் கொண்டு போக... வீதியில் வைத்து தலையில் அடிக்கும்போது...*

**"அடியா அதுருச குத்துகொள்ளுகட்ட அதுலயும் படியலனா வெளக்குமாத்துகட்டனு...** *வெவரமில்லாமலா சொல்லிருகாக...*

**"வெங்கலை போனது முந்தியில போச்சுனு..."** *பஞ்சம் பொழக்க வந்த கண்டார ஓலி... நான் படுக்குற பாயில பங்கு கேக்குறியா... என்று அடிக்க ஆரம்பித்தார்... குயிலு தடுக்காமல் வாங்கினார்.*

- *குயிலு மலைச்சாமியைப் பார்த்து "ஏன்ய்யா... நான் ஒன்னு கேக்குறேன் குடுப்பியா... (எங்கிட்ட இருந்தா.. சன்னிமலை கொட்டாடன்னுவ... நான் எங்கிட்டுருந்து கொண்டாரது...) நீ ஒன்னும் அழுத்து கலைக்க வேண்டாம்... வேர்வ சிந்தவும் வேண்டாம்... சுலவமா கெடைக்கிறது ஆனா கௌரிதியானது... (என்னது கௌரதியானது...) கேட்டா தப்பா நெனக்க மாட்டீங்களே...(என்ன கேக்கபோறவ...) எங்கிட்ட அஞ்சாறு பவளமும் கருகுமணியும் இருக்கு... கோக்குறதுக்கு ஒரு வெள்ளிக்கம்பி வேணும்... (கிருக்கு பயபுள்ள... கேட்டதுதான் கேட்ட தங்ககம்பியா கேட்டக்கக்கூடாது...) உங்கிட்ட இருக்கிறதுததான் கேட்க முடியும்... நீதான் அஞ்சாறு வெள்ளிகம்பி வெச்சிருக்கியே... கேட்ட ஒன்னு குடுக்க மாட்டியா...ஏ... என்கிட்ட ஏது வெள்ளிக்கம்பி... இடுப்புல கூட செவப்பு கயிறுதேன் கட்டியிருக்கேன்...*

***கொக்குக்கு தெரியாத கொளம்மா இருக்கு"*** *என்று கூறிக்கொண்டு தலையில் உள்ள வெள்ளை முடியைப் பிடிங்கினார்... அவர் 'ஏ..' என்றவர் பின்னர் சிரித்துக்கொண்டிருந்தார்.*

- *பொன்னாதாள் தன் கணவனைப் பற்றிக் கேள்விபட்டு புலம்பிப் கொண்டிருந்தாள். அப்பொழுது,*

***"ஆச்சமல காட்டுல அம்பது புலி அடிச்சவன் அணிபுள்ள புடிக்கறேன் போயி பஞ்ச பொழக்க போனானேன்,***

***காலம் போன காலத்துல நாரையும் பூலும் நட்டுகிட்டு நிக்குது*** *இந்த மனுசன் என்னடான்னா... லவக்கையில்லாத லம்பாடிய வெச்சுகிட்டு இருக்காறாரே... இத நான் எங்க போயி சொல்வேன்.. யாருகிட்ட போயி சொல்லுவேன் ஆத்தா..." என்று புலம்பிக்கொண்டிருந்தார். இந்த விசயம் பஞ்சாயத்துக்கு போக, "தலகட்டுக் குடும்பம்... ஊருக்குள்ளையே பெரிய குடும்பம்... அந்த குடும்பத்துக்குள்ள இப்படி ஒரு கொழப்பத்து ஏற்படுத்துதே.. நெனக்கும் போதுதான் மனசுக்கு வருத்தமா இருக்கு" என்று பஞ்சாயத்தார் பேச...*

***"கயிறு திரிக்கிறவன் ஒட்டப்பானையில நண்டெடுத்த மாதிரி...*** *பொன்னாத்தா வளவளன்னு பேசுனாலும்... அவளும் பொன்னுதான... எந்த பொண்ணுமே வட்டி சோத்தக்கூட பகுந்துகொடுப்பா... வாழ்க்கைய பகுந்து கொடுப்பாளா... கண்ண கசக்கும் போது மனசு ரொம்ப கஷ்டமாயிருக்குது..." என்று பஞ்சாயத்தில் பேசியதைக் குயிலுவிடம் கூறிய மலைச்சாமி, "போக்கத்துபோயி சாவடில தூங்குற பயனல்லாம் சரிக்கு சமமா நின்னு பேசிபுட்டான்... இதனால ஆமா... நான் அவள வெச்சுருக்கேன்னு சொல்லிபுட்டேன்..." என்றார். குயிலு நல்ல ஒரக்கச் சொன்னீங்களா என்று கேள்வி கேட்டாள்.*

- தன்னுடைய கணவர் பஞ்சாயத்தில் கூறியதைக் கேட்ட பொன்னாத்தாள், “சீமைல இல்லாத வம்சுத்துல பொறந்தவரு, மானம் போயிரும்னு எம்புட்டு நாளைக்குதான் மனசுல போட்டு பூட்டி வைக்கமுடியும்...

**“பொங்க பானையா பொங்குதே...”** பொலம்பி தீத்தாத்தான் இந்த சிரிக்கி மனசு அடங்கும் தீரும் போலிருக்கே” என்று புலம்பினாள். குயிலு, மலைச்சாமி பற்றிப் பேசிக் கொண்டு போகும் ஊர்க்காரர்கள் “அசக்க முடியாத ஆம்பளய அசச்சிப்புட்டாளே... பொம்பளயா இருக்குறதால மைகியி வெச்சு மயக்கியிருப்பளோ... இல்லன்னா இந்த ஆம்பள இப்படி பேச மாட்டேனே... ஆத்தங்கரைல இருந்துகிட்டு காரவீட்டு கூப்புமணி பேத்துபுட்டாளே இவ(ள்).

**காலம்போன காலத்துல கருவேல மரத்துல பூ பூத்தப்பலே சந்தேகம் வந்தது...** ஊருக்கு தெரிஞ்சு வரபோகுது... எவ(ன்) தலை உருளபோகுது, என்ன நடக்க போகுது” என்று பேசிக்கொண்டு சென்றனர். (குயிலு அமைதியாக கேட்டுக்கொண்டு சோகமானாள்.)

- பொன்னாத்தாள் உறவினர்களைக் கூப்பிட்டு பஞ்சாயத்து செய்ய சொல்லி அழைப்பிவிட.... அவர்களுக்காக சமைக்க உதவியாட்களை நியமித்தார்... அதில் ஒரு குள்ளமான மனிதர் “இந்தமா... சிட்டம்மா... என்ன இதவெச்சுகிட்டு ரெண்டு தேங்கா கொடு என்று கூற... (இரட்டைப் பொருள்படி)

**ம்ம்...ஆலாக்கு மாதிரி இருந்துகிட்டு பேசுற பேச்சபாரு**... பேசாம கிண்டுயா...” என்று கூற அவர்... “ஆலாக்குல உனக்கெப்புடிமா தெரியும்” என்று கேள்வி எழுப்பினார்... வந்திருந்தவர்களில் உறவினர்களில் ஒருவர்...

**“கோவலன் கூத்தவிட பொறய கூத்தா போச்சேப்பா...** அதனால பொன்னாத்தாகிட்ட சொல்லி ஒறவுகாரங்களை வரவச்சேன் என்றார்.

- இதனைக் கேட்டுக்கொண்டிருந்த மலைச்சாமி, “ஏய்... ஒப்பே உன்னதான்... துரப்புடுச்ச கொரட்டிக்கும் 20 ஆட்டுக்கும் வந்த பயதான் நான்... இருந்தாலும்,

**“இருக்க இடம்குடுத்தா கெடக்கறதா தான்னு கேக்குற..”** ஈன சாதிபயன் நான் இல்ல... சுத்தமான தேவன்...

**டே.. வெளக்குமாரு மேல மீச வெச்ச பயலங்களா...** உங்க எல்லாருக்கும் சொல்றேன்... இந்த வீடு பூரா வெட்டருவா வேல்கம்பு வச்சிருக்கேன்... உண்மையிலியே ஒரு அப்பனுக்குப் பொறந்தவனா இருந்தா எடுத்துட்டு வால்லே...” என்று கோபவசனம் பேசி நகர்கிறார்.

- மயில்வாகனன் பொன்னாத்தாள் பற்றிப் பேசும்போது, “கண்டாங்கி பொடுவகட்டி கழுத்து நெறய நகை மாட்டி போட்டு அப்டி சும்மாகும்னு வீரபாண்டி திருவிழாக்கு வருவாபாரு... அய்யய்யோ...

***அடுப்பில கெடுக்குற ஒலமாதிரி...*** *மனசு கொதிச்சிரும் கண்ணு... அதெல்லாம் ஒரு காலம்... **வான்கோழி மாதிரி வளவளன்னுபேசும்..** அந்த கூறுகெட்ட கழுத ... நான் பண்ண தப்புக்கு அவ வயிறு நெறஞ்சி போச்சு... அந்த கழுதைக்கு அப்பவே மூனு கழுத வயசு... மூலைல உக்காந்துட்டு ஒன்னு அழுவுறா... வத்ததலகுண்டு வைத்தியர்தான்.. அவ புள்ளைக்கு நான்தான் அப்பன்... அப்போ அவ எனக்கு என்ன ஆவுது... பொன்னாத்தாள் புருஷன் யாரையோ வெச்சுருக்கான்னு புளியம்பட்டி பூரா பேசிக்கிறாங்க... அதாயி மாமாங்களெல்லாம் வெவகாரத தீக்க வந்திருக்காங்களாமே... அதான் வெவரத்த தெரிஞ்சிட்டு போலாம்னு வந்தேன்...*

*‘‘**நெலத்துபட்டா எம்போ;ல இருக்குது... வெளச்செல எப்படி வேறொருத்தன் அனுப்பவிக்கலாம்”** நேலத்துபட்டா வேறயாரு நம்ம பொன்னாத்தாள்... என்று கூறினார். அதற்கு குயிலு, **“தெக்குபாத்த தோப்பையும் வடக்கு பாத்த வயலையும் பத்தி உனக்கென்னடா கவல?**,*

***நீ,சாகவும் நாலடி உன்ன பொதைக்க நாலடிதான் வேணும்”*** *என்று பேசி கோவம் அடைந்த குயிலு அவனைக் துடுப்பால் அடித்து கொன்ற விடுகிறாள்.*

*இவ்வாறு படம் முழுக்க பழமொழிகளைக் கொண்டு பயணிப்பதைக் காணமுடியும். மேற்கண்ட பழமொழிகளின் பயன்பாட்டைக் கருதியே மக்கள் இது கிராமிய படம் என்று அழைத்திருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. அந்த அளவிற்கு ஏராளமான பழமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் பழமொழிகள் வெளியான காலத்தை மட்டும் குறிப்பிடபடவில்லை. ஆனால் காலத்தோடு சேர்த்தே பொருள் கொள்ள வேண்டும். அந்த வகையில் மேற்கண்ட பழமொழிகளின் வாயிலாக உரிமை, வீண் செயல், துன்பம், பண்பு, எதிர்பார்ப்பு, கற்பனை, ஏமாற்றம், தகுதி, தன்மை, நடக்காத தன்மை, கணவன், அனுபவம், தண்டனை, மாற்றம், சுய பெருமை, இறப்பு தத்துவம் எனப் பல்வேறு கருத்துக்களை மையமிட்டு வெளிவந்துள்ளதை அறியமுடிகிறது.மேலும் பழமொழிகளைப் போன்றிருக்கக்கூடிய உவமைகளும் பல இடங்களில் வெளிப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. ஆகையால் இப்பழமொழிகள் குறித்து வேறொரு ஆய்வுக் கட்டுரையினை எதிர்வரும் காலங்களில் எதிர்நோக்கலாம்.*